2nd March 1968]

இருக்கிறார்கள். அவர்களின் முடிவு பாவாடைப் படையாச்சி அதிர்ச்சியினால் இயற்கையாகவே இறந்திருக்கிறார் என்பதாகும். வேறு எதுவும் இல்லை.

திரு. எம். எத்திராஜுலு : தலைவரவர்களே, பாவாடைப் படையாச்சி அந்த ஊரில் இருப்பவர். அவர் வீட்டின் உள்ளே சென்று தாக்கி, கையைப் பின்கட்டாகக் கட்டிப் போலீஸ் ஸ்டேஷனுக்கு அழைத்துச் சென்றதாகவும், அவரை அங்கே லாக்கப்பில் வைத்து மறுதினம் மாஜிஸ்ட்ரேட் முன்பு ஆஜர் செய்ய அழைத்து வரும்போது, எதிரில் உள்ள கோவிலின் முன்பாக அவர் "என்னை அநீதியாக போலீஸ்காரர்கள் இப்படி துன்புறுத்தி, வற்புறுத்தி அழைத்துச் செல்கிறார்கள் ; நீங்கள் தான் கேட்க வேண்டும், ஆண்டவன் தான் கேட்க வேண்டும்", என்று சொன்ன பிறகுதான், அந்த இடத்தில் உயிர் துறந்தார் என்று பத்திரிகையில் வந்திருக்கிறது. பொது மக்களும் அப்படியேதான் சொல்கிறார்கள். ஆகையால் தானாகவே இறந்திருக்கிறார் என்று சொல்வது எப்படி நியாயமாகும் ? ஆகவே இதைத் தனியான நீதிபதி அமைத்து விசாரிக்க அரசாங்கம் முன்வருமா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : பத்திரிகையில் வந்தது அரசியல் வர்ணம் பூசப்பட்டு வந்த செய்தியாகும். உண்மையிலே நடைபெற்ற தகவல் பாவாடைப் படையாச்சி என்பவருக்கும், அவருடைய பங்காளி சீனிவாச படையாச்சி என்பவருக்கும் பந்தக் கால்நடுவதில் ஏற்பட்ட தகராறு. சீனிவாச படையாச்சி தன்னுடைய மகன் திருமணத்திற்காக பந்தக்கால் நடுவதற்கு ஒரு இடம் தேர்ந்தெடுத்தார். அந்த நிலம் தன்னுடையது என்று பாவாடைப் படையாச்சி தகராறு செய்தார். இருவர்களுக்கும் இதன் காரணமாக சண்டை வந்தது. சீனிவாச படையாச்சிக்கு உதவியாக வந்த குப்புசாமி படையாச்சியின் இடது தோளில் பாவாடை படையாச்சி குத்திவிட்டார். அதன் காரணமாக அவர் ஓடியபோது மக்கள் பின்னால் சென்று அவரைப் பிடித்து போலீஸில் ஒப்படைத்தார்கள். போலீஸ்காரர்கள் அவரை கோர்ட்டுக்கு அழைத்துச் செல்லும் நேரத்தில் பாவாடைப் படையாச்சி அதிர்ச்சியினால் மரணம் அடைந்தார். அவருக்கு வயது **60**-க்கு மேல் இருக்கும் என்று சொல்லப்படுகிறது.

Police Uniform.

***160-B** *Q.*—THIRU N. R. THIAGARAJAN : **Will the Hon. the Chief Minister be pleased to state whether there is any proposal to change the uniform and the shape of the helmet of policemen in Tamilnad ?**

போலீஸாரின் உடுப்பு.

திரு. என். ஆர். தியாகராஜன் : மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

தமிழகப் போலீஸாரின் உடுப்பு, தொப்பி அமைப்பு ஆகியவைகளை மாற்றும் உத்தேசமுண்டா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி (on behalf of the Hon. the Chief Minister) : உடுப்பினை மாற்றும் உத்தேசம் இல்லை. தொப்பியைப் பொறுத்து மாறுதல் செய்வதை இந்த அரசு ஏற்றுக்கொண்டுள்ளது.

திரு. என். ஆர். தியாகராஜன் : தலைவரவர்களே, தொப்பியை எப்படி மாற்றப் போகிறார்கள் ? என்ன கலரில் இருக்கும் ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : கலர் ஒன்றும் நண்பர் தியாகராஜன் அவர்கள் பயப்படுவதுபோல் இருக்காது. இப்போது அவர்கள் "working dress" ஆக "பேரே கேப்" அணியவேண்டுமென்றும், "Ceremonial function" நேரங்களில் "பீக்—கேப்" அணிய வேண்டுமென்றும் ஐ.ஜி. அவர்கள் யோசனை கூறி அதற்கு ஏற்ப 24—2—1967-ல்

திரு. கக்கன் போலீஸ் அமைச்சராக இருந்த காலத்தில், ஏற்றுக்கொள்ளப் பட்டது. அந்த வகையில்தான் இந்த மாற்றத்தை இந்த அரசும் ஏற்றுக் கொண்டது.

திரு. என். ஆர். தியாகராஜன் : ஓடும்போது குல்லாயை பிடித்துக் கொண்டு ஓடவேண்டிய கஷ்ட நிலையில்லாமல் அமைப்பாக இருந்து ஓடுவதற்கு தகுந்தவாறு செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : போலீஸ் அதிகாரிகளைப் பொறுத்துத்தான் இப்போது தொப்பி மாற்றம் செய்யப்படுகிறது. போலீஸ்காரர்களுக்கு தொப்பி மாற்றமில்லை. அதிகாரிகள் ஓடவேண்டிய நிலை வந்தால் விழாமல் இருப்பதற்கு ஒரு ரிப்பன் கட்டப்படுகிறது.

திரு என். வி. நடராசன் : தலைவரவர்களே, எத்தனை போலீஸ் அதிகாரிகளுக்கு இந்த மாதிரியான மாற்றம் செய்யப்படுகிறது ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : அதிகாரிகளைப் பொறுத்தவரை, இன்ஸ்பெக்டர், சப்-இன்ஸ்பெக்டர், அஸிஸ்டண்ட் சப்-இன்ஸ்பெக்டர், ரிசர்வ் இன்ஸ்பெக்டர், ரிசர்வ் சப்-இன்ஸ்பெக்டர், ரிசர்வ் அஸிஸ்டண்ட் சப்-இன்ஸ்பெக்டர், ஆகிய 1,868 பேர்களுக்கும், சுபேதார்-மேஜர், சுபேதார், ஜமேதார் ஆகிய (Reserve Armed Police) 495 பேர்களுக்கும் கொடுக்க பழைய அரசு தீர்மானித்திருந்தது. நம்முடைய முதலமைச்சர் அவர்கள் அவர்களோடு சூப்பிரண்டண்ட் ஆப் போலீஸ், டெபுடி சூப்பிரண்டன்ட் ஆப் போலீஸ், அஸிஸ்டண்ட் சூப்பிரண்டன்ட் ஆப் போலீஸ் ஆகியவர்களுக்கும் சேர்த்து 90 பேர்களுக்கு தொப்பி மாற்றம் செய்யலாம் என்று கூறிய கருத்து முடிவாக இப்போது ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கிறது.

Police shorthand writers

160-C *Q*.—THIRU N. R. THIAGARAJAN : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether police shorthand writers are sent for the political public meetings ; and

(*b*) whether the police shorthand writers are sent to the meetings conducted by all the political parties ?

போலீஸ் சுருக்கெழுத்தாளர்கள்

திரு. என். ஆர். தியாகராஜன் : மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) அரசியல் பொதுக் கூட்டங்களுக்கு போலீஸ் சுருக்கெழுத் தாளர்கள் அனுப்பப்படுகிறார்களா ?

(இ) எல்லா கட்சியினர் கூட்டங்களுக்கும் போலீஸ் சுருக்கெழுத் தாளர்கள் அனுப்பப்படுகிறார்களா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி (on behalf of the Hon. the Chief Minister) : (அ) & (இ) ஆளும் கட்சியைத் தவிர மற்ற கட்சியின் கூட்டங்களுக்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகளின் உத்தரவின் பேரில் சுருக்கெழுத்தாளர்கள் அனுப்பப்படுகிறார்கள்.

திரு. என். ஆர். தியாகராஜன் : தலைவரவர்களே, ஆரம்பத்தில் போலீஸ் சுருக்கெழுத்தாளர்களை எந்த கூட்டங்களுக்கும் அனுப்பப் போவ தில்லை என்றெல்லாம் கூறப்பட்டது. அது உண்மையா ? இப்போது சுருக்கெழுத்தாளர்கள் வருவது மாத்திரமல்ல. அரசியல் வாதிகளுக்கு வரும் கடிதங்கள் கூட போஸ்ட் ஆபீஸில் திறந்து பார்க்கப்படுகிறது. எனக்கு வரும் கடிதங்கள் அவ்விதம் பார்க்கப்படுகிறது. நான் எழுதும் கடிதங்களும் பார்க்கப்படுகின்றன. அதுமட்டுமல்ல, போலீஸ் இன்ஸ்-